


இரண்டு முக்கியஸ்தர்களைப் போன இதழில் பார்த்தோம். இப்போது இன்னும் சிலர். இந்தப் பெயர்களும் முகங்களும் நமக்கு மிகவும் புதிது. கொஞ்சம் மெனக்கெட்டு ஞாபகத்தில் வைத்துக்கொண்டு விட்டால், பின்னால் இவர்கள் செய்யப் போகிற காரியங்களைப் புரிந்து கொள்வது சுலபமாக இருக்கும்.

ஹமாஸுக்கு அதன் செயல்தான் முகமே என்றபோதிலும், இன்றைய தேதியில் அவர்களும் மேடை போட்டுக் கொடிகட்டி, நூற்று முப்பத்தெட்டாவது வட்டத்தின் சார்பில் பொதுக்கூட்டங்களும் நடத்தி, சட்ட மன்றத்தில் மைக் வீசாத குறையாக, அரசியல் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்கிறபடியால், இந்தப் பிரமுகர்களையும் அறிமுகம் செய்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

டாக்டர் மஹ்மூத் அல் ஜஹாருக்கு (Mahmoud alZahar) அறுபது வயது ஆகிறது. ஹமாஸின் தொடக்க கால உறுப்பினர். இன்னும் சொல்லப்போனால், தொடங்கியவர்களுள் ஒருவர். காஸா பகுதியில் மிகப்பெரிய டாக்டர். கடினமான அறுவை சிகிச்சைகள் என்றால், 'கூப்பிடு மஹ்மூதை' என்றுதான் அங்கே சொல்வார்கள். காஸா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறை பேராசிரியரும் கூட.

ஷேக் அகமது யாசினுக்குக் கடைசிக் காலம் வரை பர்சனல் டாக்டராக இருந்தவர். யாசினும் அவரை அடுத்து ரண்டிஸியும் இஸ்ரேலியப் படையினரால் ஏவுகணை வீசிக் கொல்லப்பட்டபோது, ஹமாஸின் அறிவிக்கப்படாத அடுத்த தலைவராகச் செயல்பட்டவர் டாக்டர் மஹ்மூத் தான்.

மஹ்மூதை ஹமாஸின் பிற தலைவர்கள் கூடி, இயக்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தபோது, டமஸ்கஸில் இருந்த காலீத் மஷால்தான் அவசர அவசரமாகத் தொடர்புகொண்டு 'அறிவித்துவிடாதீர்கள்' என்று அலறினார்.

ஏனென்றால், இஸ்ரேலிய ராணுவம் அப்போது ஒரு முடிவில் இருந்தது. யார் யாரையெல்லாம் அடுத்தடுத்து தலைவராக அறிவிக்கிறார்களோ, அவர்களையெல்லாம் உடனே உடனே போட்டுத்தள்ளி விடுவது என்பது அவர்களது செயல்திட்டம்.

அதனால்தான், ரண்டிஸி கொல்லப்பட்டு மஹ்மூத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, தங்கள் தலைவரை ஹமாஸ் அறிவிக்காமலேயே இருந்துவிட்டது. ஆனால், இயக்கத்தின் அடித்தட்டுத் தொண்டர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தலைவரின் முகமும் முகவரியும் வேண்டியிருக்குமல்லவா? தாங்கள் யாருடைய கட்டளைக்கு வேலை செய்கிறோம் என்று தெரியாமலேயா வேலை பார்க்க முடியும்?

ஆகவே, ஹமாஸ் அப்போது ஓர் உபாயம் செய்தது. தலைவர் என்று ஒருவரல்ல. ஆனால், தலைமை தாங்கி வழிநடத்தும் மேல் மட்டக் குழு ஒன்று செயல்படும் என்று அறிவித்தார்கள்.

மேல் மட்டக் குழு என்றால்?

யார் யாரெல்லாம் ஹமாஸின் முக்கியஸ்தர்களோ, அத்தனை பேரும் அடங்கிய குழு என்று சொல்லப்பட்டது.

இதனால்தான், இஸ்ரேலின் ரத்த வெறிக்கு அடுத்த பலியாக, உடனே யாரும் அகப்படாமல் போனார்கள். அவர்கள் யார் யாரெல்லாம் மேல் மட்டப் பெருந்தலைகள் என்று ஒவ்வொருவராகத் தேட ஆரம்பித்துவிட்டார்கள். மிகக் கவனமாக, அத்தகைய தலைவர்கள் அத்தனை பேரும் அந்தச் சமயத்தில் பாலஸ்தீனுக்கு வெளியே பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டார்கள். மம்மூத் மட்டும் வழக்கம்போல் காஸாவில் இருந்தார். எனவே, பாலஸ்தீனுக்கு வெளியே கவனம் செலுத்திய மொசாட், காஸாவிலேயே இருந்த மம்மூதை கவனிக்காமல் விட்டுவிட்டது.

ஒரு பாலஸ்தீனியத் தந்தைக்கும் எகிப்துத் தாய்க்கும் 1945-ம் ஆண்டு பிறந்தவர் டாக்டர் மம்மூத். இளம் வயது முழுவதையும் எகிப்தில் கழித்தார். கெய்ரோவில்தான் அவர் மருத்துவம் படித்தார். அவர் படிப்பை முடித்துவிட்டு பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய காலத்தில், காஸா பகுதி எகிப்தின் ஆக்கிரமிப்பில் இருந்தபடியால், அங்கே இஸ்லாமியப் பல்கலையில் வந்து பணியாற்ற வேண்டி அவரை அனுப்பி வைத்தார்கள்.

வந்த இடத்தில் அவருக்கு ஒரு தோழர் கிடைத்தார். அப்துல் அஜிஸ் அல் ரண்டிஸி. அவரும் ஒரு டாக்டர் அல்லவா?

இஸ்லாமிய சகோதரத்துவம், பாலஸ்தீனியர்களின் அவல வாழ்க்கை, இஸ்ரேலின் அட்டூழியங்கள் அனைத்தும் சேர்ந்து கதம்பமாக டாக்டர் மம்மூதின் மனதை ஆக்கிரமித்தன. இருக்கவே இருக்கிறார் ரண்டிஸி. போதாது?

1987-ல் முதல் இண்டிஃபாதா தொடங்கியபோது, 'இஸ்ரேலின் அத்தனை சால்ஜாப்புகளையும், சமரசக் கண்துடைப்பு நடவடிக்கைகளையும் நிராகரிப்போம்' என்று ஹமாஸின் முதல் அனல் அறிக்கை வெளியானபோது, அதை வடிவமைத்தவர் டாக்டர் மம்மூத் தான் என்பது பலபேருக்குத் தெரியாது.

1989-ல், இஸ்ரேலிய ராணுவத்துக்கு உதவி செய்த பாலஸ்தீனியர்கள் சிலரைக் கொல்ல உத்தரவிட்டார் என்றொரு பொய்க்குற்றச்சாட்டின் பேரில், யாசின் கைது செய்யப்பட்டு, ஆயுள்சிறை என்று அறிவிக்கப்பட்டபோது, ஹமாஸை ரண்டிஸியுடன் இணைந்து வழி நடத்தியவர் மம்மூத் தான். (பிறகு காலீத் மஷால் விவகாரத்தின்போது யாசின் விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்பதைப் போன அத்தியாயத்தில் பார்த்திருக்கிறோம்!)

1992-ல் லெபனானுக்கு நாடு கடத்தல், கையோடு அவரது மகன் மீது குண்டு வீசிப் படுகொலை, சகோதரருக்கு நாடு கடத்தல், கடுங்காவல் என்று தனிப்பட்ட முறையில் ஏகப்பட்ட கஷ்டங்களைப் பார்த்தவர் மம்மூத்.

2003-ம் ஆண்டு இஸ்ரேலிய ராணுவம், மம்மூதை எப்படியாவது ஒழித்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு, அவரது வீட்டின்மீது இடைவிடாமல் ஒரு மணிநேரம் குண்டு மழை பொழிந்து உடைத்து நொறுக்கியது. அந்தச் சமயத்தில்தான் அவரது மகனும் ஒரு மெய்க்காப்பாளரும் மரணமடைந்தார்கள். அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய மம்மூத், அதன்பிறகுதான் தாக்குதல் + நாடாளுமன்ற ஜனநாயகம் என்கிற இரட்டைப்பாதையில் ஹமாஸ் முன்னேற, மிகத் தீவிரமாக

உழைக்கத் தொடங்கினார்.

இன்றைக்கும் காஸா பகுதியில், டாக்டர் மஹ்மூத் என்றால் எழுந்து நின்று சல்யூட் அடிப்பார்கள். யாசினுக்குப் பிறகு, அந்தப் பிராந்தியத்தின் தனிப்பெரும் தலைவர் என்றால் அது அவர்தான்.

அடுத்தவர் இஸ்மாயில் ஹனியா. 1963-ம் ஆண்டு ஏதோ ஒரு மாதம், ஏதோ ஒரு தேதியில் ஓர் அகதி முகாமில் பிறந்தவர் (இவர்களுடைய பர்த் சர்டிஃபிகேட்டுகளையெல்லாம் யாராவது புண்ணியவான் எடுத்து வைத்திருந்தால்தான் உண்டு. ஒருத்தருக்குக் கூட சரியாகக் கிடைப்பதில்லை.) இஸ்மாயில் ஹனியா. 1948-ல் நடந்த யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனியக் குடும்பங்களுள் ஒன்று அவருடையது.

அன்றைய தேதியில் ஹனியாவின் பெற்றோரிடம் யாராவது 'உன் மகன் எதிர்காலத்தில் பாலஸ்தீனின் பிரதமராக வருவான்' என்று சொல்லியிருந்தால், சிரித்திருப்பார்கள் அல்லது அடித்துத் துரத்தியிருப்பார்கள். ஒரு வேளை உணவு, ஒரே ஒரு மாற்று உடை. இவ்வளவுதான் அவர்களிடம் இருந்தது. அதிலும் உணவுத் தேவை, அகதி முகாம் நடத்தியவர்களால் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்தது. இல்லாவிட்டால் அதுவும் இல்லை.

ஆகவே, மிக இளம் வயதிலிருந்தே இஸ்ரேல் என்றால், ஹனியாவுக்கு அருவருப்பு. தவிரவும் கோபம், ஆங்காரம். ஆனால், எடுத்த எடுப்பில் துப்பாக்கி தூக்கிக்கொண்டு போராளியாகப் போய்விடாமல், ஒழுங்காகக் கஷ்டப்பட்டுத் தானே பகுதி நேரம் சம்பாதித்து, காஸா பல்கலைக் கழகத்தில் அரபி இலக்கியம் படித்து, பட்டம் வாங்கிக்கொண்டு போராளியானாரே, அங்குதான் அவர் வித்தியாசப்படுகிறார். 'இலக்கியம் எனக்கு; போராட்டம் எங்களுக்கு' என்பார் ஹனியா.

படிக்கிற காலத்திலேயே அவருக்கு அரசியல் ஈடுபாடு உண்டு. கொஞ்சம் சமயம் கிடைத்தால், யாசின் வீட்டுக்குப் போய்விடுவார். உட்கார்ந்து அவர் பேசுவதைக் கேட்டுவிட்டுத் திரும்புவது அவருக்குப் பல்கலைக்கழகப் படிப்பைவிட முக்கியம். அங்கேதான் அவருக்கு ரண்டிஸி அறிமுகமானார். மஹ்மூத் அறிமுகமானார். மற்ற அத்தனை ஹமாஸ் தலைவர்களும் அறிமுகமானார்கள்.

ஒரு பக்கம் படிப்பு. இன்னொரு பக்கம் போராட்டம் என்பதை மிகத் திறமையாக அவர் கையாண்ட விதம், யாசினுக்குப் பிடித்தது. ஹனியாவிடம் முதலில் அவர் அறிக்கைகள் தயார் செய்யும் வேலையைத்தான் கொடுத்தார். விவாதங்களின் இடையே சட்டென்று, 'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என்று கருத்துக் கேட்பார்.

வயதில் மிகவும் இளையவர் என்றாலும், ஹனியா பெரும்பாலும் யாசினைப் போலவே சிந்திக்கக்கூடியவர். ஆகவே, அவரது குரல் ஹமாஸ் இயக்கத்தினருக்கும் சரி, காஸா பகுதி மக்களுக்கும் சரி யாசினே பேசுவது போலத்தான் கேட்கும்.

1989-ம் ஆண்டு மற்ற பல ஹமாஸ் தலைவர்களைப் போலவே, ஹனியாவும் இஸ்ரேலிய அரசால் நாடு கடத்தப்பட்டு லெபனானுக்குப் போனார். திரும்பி வந்ததும் அவரை, அவர் படித்த பல்கலைக்கழகமே டீனாகப் பதவி கொடுத்துக் கூப்பிட்டது.

கசக்கிறதா? சரியென்று உடனே ஒப்புக்கொண்டு, பேராசிரியர் பணியையும் பார்த்துக்கொண்டு, ஹமாஸுக்காகவும் உழைக்கத் தொடங்கினார்.

அந்தக் காலகட்டத்தில் இஸ்ரேலுக்கு மிக அதிகம் குடைச்சல் கொடுத்த ஹமாஸ் தலைவர் என்றால், ஹனியாதான். ஹமாஸின் அரசியல் குழுவிலும் அவர் உறுப்பினராக இருந்தார்; ஆயுதக் குழுவிலும் மெம்பராக இருந்தார். அனல் பறக்க அறிக்கையும் வீசுவார், தீ பறக்க ராக்கெட்டும் விடுவார். ஹமாஸின் பல தற்கொலைத் தாக்குதல் திட்டங்களுக்கு வடிவம் கொடுத்தவர்

ஹனியாதான்.

இதனால் எப்படியாவது அவரைத் தீர்த்துவிடுவது என்று முடிவு செய்தது இஸ்ரேல் ராணுவம். ஒரு சமயம், ஹனியா ஜெருசலேத்துக்கு வருகிறார் என்கிற தகவல் கேள்விப்பட்டு, தயாராக ஒரு ஹெலிகாப்டரை அங்கே நிறுத்தியிருந்தார்கள். எங்கிருந்தோ, எங்கோ பறந்து போகிற ஹெலிகாப்டர் என்பது போல் ஒரு செட்டப். ஹனியா இறங்கும் சமயம் பார்த்து, கரெக்டாக மேலிருந்து குண்டு வீசிவிட்டுக் காணாமல் போய்விட வேண்டும் என்பது திட்டம்.

ஜெருசலேத்தில் உள்ள அல் அக்ஸா பள்ளிவாசலை மீட்பதற்காக, ஹமாஸ் மேற்கொண்டிருந்த மிக நெடிய போராட்டத்தின் தொடக்க காலம் அது. இன்னொரு பக்கம், பாலஸ்தீன் விடுதலை இயக்கமும் அதே போராட்டத்தில் இறங்கியிருந்தது. எனவே, போராளிக் குழுத் தலைவர்கள் அடிக்கடி ஜெருசலேத்துக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

யார் தப்பித்தாலும் சரி, ஹனியாவைத் தீர்த்துவிடுவது என்று முடிவு செய்த இஸ்ரேலியப் படை, மேற்படி திட்டத்தைச் செயல்படுத்தியபோது, மிக மிக அதிர்ஷ்டவசமாகத்தான் ஹனியா உயிர் பிழைத்தார்.

குண்டு வீச்சில் அவரது ஒரு கை மட்டுமே பாதிக்கப்பட்டது. மயிரிழையில் தப்பித்துவிட்டார்.

அந்தச் சமயத்தில்தான், ஹனியாவை யாசின் ஹமாஸின் மத்தியக் குழு உறுப்பினராக்கி, தலைமை அலுவலகத்துக்கு தினசரி வந்துபோகும்படி பணித்திருந்தார். அவரது இருப்பும் சேவையும் இயக்கத்துக்கு மிக முக்கியமானது என்பதாக அறியப்பட்டிருந்தது. எனவே, குண்டு வீச்சு சம்பவத்துக்குப் பிறகு, ஹனியாவை கோழிக்குஞ்சு போல அடைகாக்க ஆரம்பித்துவிட்டார்கள். வெளியே தலையே காட்டமாட்டார். ஆனால், செயல்பாடுகள் எப்போதும்போல் தொடரவே செய்தது.

டிசம்பர் 2005-ல் ஹனியா, ஹமாஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது தலைமையில்தான் ஹமாஸ் ஜனவரி 2006 தேர்தலைச் சந்தித்து பெருவெற்றி பெற்றது. (இந்த விவரங்கள் பின்னால் வரும்.)

அந்த மகத்தான தேர்தல் வெற்றி பிப்ரவரியில் ஹனியாவை பாலஸ்தீன் அத்தாரிடியின் பிரதமராக்கியது. ஆளும் கட்சியாக ஹமாஸ். அதிபராக, பி.எல்.ஓவின் மம்மூத் அப்பாஸ். ஏழாம் பொருத்தம் என்பார்களே, அது.

தினசரி முட்டல் மோதல், வாக்குவாதங்கள் இன்றுவரை தொடரத்தான் செய்கிறது. ஹனியா அடிக்கடி தலைமறைவாக வேண்டிய அவசியமும் இருக்கவே இருக்கிறது. கொள்கை அளவில் இஸ்ரேலை ஹமாஸ் அங்கீகரித்துவிட்டதாக அறிவித்தாலும், இன்றைக்கும் ஹனியா மட்டும் முகத்தைத் திருப்பித்தான் வைத்துக்கொண்டிருக்கிறார். கொலை மிரட்டல்களுக்கு அவரது ஒரே பதில் - 'முடிந்தால் கொன்றுகொள்ளுங்களேன்?'

ஆக, ஹமாஸ்காரர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று ஒரு ஐடியா கிடைத்திருக்கும் அல்லவா? இனி, ஆட்டத்துக்குப் போகலாம்.




இரண்டு முக்கியஸ்தர்களைப் போன இதழில் பார்த்தோம். இப்போது இன்னும் சிலர். இந்தப் பெயர்களும் முகங்களும் நமக்கு மிகவும் புதிது. கொஞ்சம் மெனக்கெட்டு ஞாபகத்தில் வைத்துக்கொண்டு விட்டால், பின்னால் இவர்கள் செய்யப் போகிற காரியங்களைப் புரிந்து கொள்வது சுலபமாக இருக்கும்.

ஹமாஸுக்கு அதன் செயல்தான் முகமே என்றபோதிலும், இன்றைய தேதியில் அவர்களும் மேடை போட்டுக் கொடிகட்டி, நூற்று முப்பத்தெட்டாவது வட்டத்தின் சார்பில் பொதுக்கூட்டங்களும் நடத்தி, சட்ட மன்றத்தில் மைக் வீசாத குறையாக, அரசியல் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்கிறபடியால், இந்தப் பிரமுகர்களையும் அறிமுகம் செய்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

டாக்டர் மம்மூத் அல் ஜஹாருக்கு (Mahmoud alZahar) அறுபது வயது ஆகிறது. ஹமாஸின் தொடக்க கால உறுப்பினர். இன்னும் சொல்லப்போனால், தொடங்கியவர்களுள் ஒருவர். காஸா பகுதியில் மிகப்பெரிய டாக்டர். கடினமான அறுவை சிகிச்சைகள் என்றால், 'கூப்பிடு மம்மூதை' என்றுதான் அங்கே சொல்வார்கள். காஸா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறை பேராசிரியரும் கூட.

ஷேக் அகமது யாசினுக்குக் கடைசிக் காலம் வரை பர்சனல் டாக்டராக இருந்தவர். யாசினும் அவரை அடுத்து ரண்டிஸியும் இஸ்ரேலியப் படையினரால் ஏவுகணை வீசிக் கொல்லப்பட்டபோது, ஹமாஸின் அறிவிக்கப்படாத அடுத்த தலைவராகச் செயல்பட்டவர் டாக்டர் மம்மூத் தான்.

மம்மூதை ஹமாஸின் பிற தலைவர்கள் கூடி, இயக்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தபோது, டெமஸ்கஸில் இருந்த காலீத் மஷால்தான் அவசர அவசரமாகத் தொடர்புகொண்டு 'அறிவித்துவிடாதீர்கள்' என்று அலறினார்.

ஏனென்றால், இஸ்ரேலிய ராணுவம் அப்போது ஒரு முடிவில் இருந்தது. யார் யாரையெல்லாம் அடுத்தடுத்து தலைவராக அறிவிக்கிறார்களோ, அவர்களையெல்லாம் உடனே உடனே போட்டுத்தள்ளி விடுவது என்பது அவர்களது செயல்திட்டம்.

அதனால்தான், ரண்டிஸி கொல்லப்பட்டு மம்மூத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, தங்கள் தலைவரை ஹமாஸ் அறிவிக்காமலேயே இருந்துவிட்டது. ஆனால், இயக்கத்தின் அடித்தட்டுத் தொண்டர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தலைவரின் முகமும் முகவரியும் வேண்டியிருக்குமல்லவா? தாங்கள் யாருடைய கட்டளைக்கு வேலை செய்கிறோம் என்று தெரியாமலேயா வேலை பார்க்க முடியும்?

ஆகவே, ஹமாஸ் அப்போது ஓர் உபாயம் செய்தது. தலைவர் என்று ஒருவரல்ல. ஆனால், தலைமை தாங்கி வழிநடத்தும் மேல் மட்டக் குழு ஒன்று செயல்படும் என்று அறிவித்தார்கள்.

மேல் மட்டக் குழு என்றால்?

யார் யாரெல்லாம் ஹமாஸின் முக்கியஸ்தர்களோ, அத்தனை பேரும் அடங்கிய குழு என்று சொல்லப்பட்டது.

இதனால்தான், இஸ்ரேலின் ரத்த வெறிக்கு அடுத்த பலியாக, உடனே யாரும் அகப்படாமல் போனார்கள். அவர்கள் யார் யாரெல்லாம் மேல் மட்டப் பெருந்தலைகள் என்று ஒவ்வொருவராகத் தேட ஆரம்பித்துவிட்டார்கள். மிகக் கவனமாக, அத்தகைய தலைவர்கள் அத்தனை பேரும் அந்தச் சமயத்தில் பாலஸ்தீனுக்கு வெளியே பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டார்கள். மம்மூத் மட்டும் வழக்கம்போல் காஸாவில் இருந்தார். எனவே, பாலஸ்தீனுக்கு வெளியே கவனம் செலுத்திய மொசாட், காஸாவிலேயே இருந்த மம்மூதை கவனிக்காமல் விட்டுவிட்டது.

ஒரு பாலஸ்தீனியத் தந்தைக்கும் எகிப்துத் தாய்க்கும் 1945-ம் ஆண்டு பிறந்தவர் டாக்டர் மம்மூத். இளம் வயது முழுவதையும் எகிப்தில் கழித்தார். கெய்ரோவில்தான் அவர் மருத்துவம் படித்தார். அவர் படிப்பை முடித்துவிட்டு பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய காலத்தில், காஸா பகுதி எகிப்தின் ஆக்கிரமிப்பில் இருந்தபடியால், அங்கே இஸ்லாமியப் பல்கலையில் வந்து பணியாற்ற வேண்டி அவரை அனுப்பி வைத்தார்கள்.

வந்த இடத்தில் அவருக்கு ஒரு தோழர் கிடைத்தார். அப்துல் அஜிஸ் அல் ரண்டிஸி. அவரும் ஒரு டாக்டர் அல்லவா?

இஸ்லாமிய சகோதரத்துவம், பாலஸ்தீனியர்களின் அவல வாழ்க்கை, இஸ்ரேலின் அட்டூழியங்கள் அனைத்தும் சேர்ந்து கதம்பமாக டாக்டர் மம்மூதின் மனதை ஆக்கிரமித்தன. இருக்கவே இருக்கிறார் ரண்டிஸி. போதாது?

1987-ல் முதல் இண்டிஃபாதா தொடங்கியபோது, 'இஸ்ரேலின் அத்தனை சால்ஜாப்புகளையும், சமரசக் கண்துடைப்பு நடவடிக்கைகளையும் நிராகரிப்போம்' என்று ஹமாஸின் முதல் அனல் அறிக்கை வெளியானபோது, அதை வடிவமைத்தவர் டாக்டர் மம்மூத் தான் என்பது பலபேருக்குத் தெரியாது.

1989-ல், இஸ்ரேலிய ராணுவத்துக்கு உதவி செய்த பாலஸ்தீனியர்கள் சிலரைக் கொல்ல உத்தரவிட்டார் என்றொரு பொய்க்குற்றச்சாட்டின் பேரில், யாசின் கைது செய்யப்பட்டு, ஆயுள்சிறை என்று அறிவிக்கப்பட்டபோது, ஹமாஸை ரண்டிஸியுடன் இணைந்து வழி நடத்தியவர் மம்மூத் தான். (பிறகு காலீத் மஷால் விவகாரத்தின்போது யாசின் விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்பதைப் போன அத்தியாயத்தில் பார்த்திருக்கிறோம்!)

1992-ல் லெபனானுக்கு நாடு கடத்தல், கையோடு அவரது மகன் மீது குண்டு வீசிப் படுகொலை, சகோதரருக்கு நாடு கடத்தல், கடுங்காவல் என்று தனிப்பட்ட முறையில் ஏகப்பட்ட கஷ்டங்களைப் பார்த்தவர் மம்மூத்.

2003-ம் ஆண்டு இஸ்ரேலிய ராணுவம், மம்மூதை எப்படியாவது ஒழித்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு, அவரது வீட்டின்மீது இடைவிடாமல் ஒரு மணிநேரம் குண்டு மழை பொழிந்து உடைத்து நொறுக்கியது. அந்தச் சமயத்தில்தான் அவரது மகனும் ஒரு மெய்க்காப்பாளரும் மரணமடைந்தார்கள். அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய மம்மூத், அதன்பிறகுதான் தாக்குதல் + நாடாளுமன்ற ஜனநாயகம் என்கிற இரட்டைப்பாதையில் ஹமாஸ் முன்னேற, மிகத் தீவிரமாக

உழைக்கத் தொடங்கினார்.

இன்றைக்கும் காஸா பகுதியில், டாக்டர் மஹ்மூத் என்றால் எழுந்து நின்று சல்யூட் அடிப்பார்கள். யாசினுக்குப் பிறகு, அந்தப் பிராந்தியத்தின் தனிப்பெரும் தலைவர் என்றால் அது அவர்தான்.

அடுத்தவர் இஸ்மாயில் ஹனியா. 1963-ம் ஆண்டு ஏதோ ஒரு மாதம், ஏதோ ஒரு தேதியில் ஓர் அகதி முகாமில் பிறந்தவர் (இவர்களுடைய பர்த் சர்டிஃபிகேட்டுகளையெல்லாம் யாராவது புண்ணியவான் எடுத்து வைத்திருந்தால்தான் உண்டு. ஒருத்தருக்குக் கூட சரியாகக் கிடைப்பதில்லை.) இஸ்மாயில் ஹனியா. 1948-ல் நடந்த யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனியக் குடும்பங்களுள் ஒன்று அவருடையது.

அன்றைய தேதியில் ஹனியாவின் பெற்றோரிடம் யாராவது 'உன் மகன் எதிர்காலத்தில் பாலஸ்தீனின் பிரதமராக வருவான்' என்று சொல்லியிருந்தால், சிரித்திருப்பார்கள் அல்லது அடித்துத் துரத்தியிருப்பார்கள். ஒரு வேளை உணவு, ஒரே ஒரு மாற்று உடை. இவ்வளவுதான் அவர்களிடம் இருந்தது. அதிலும் உணவுத் தேவை, அகதி முகாம் நடத்தியவர்களால் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்தது. இல்லாவிட்டால் அதுவும் இல்லை.

ஆகவே, மிக இளம் வயதிலிருந்தே இஸ்ரேல் என்றால், ஹனியாவுக்கு அருவருப்பு. தவிரவும் கோபம், ஆங்காரம். ஆனால், எடுத்த எடுப்பில் துப்பாக்கி தூக்கிக்கொண்டு போராளியாகப் போய்விடாமல், ஒழுங்காகக் கஷ்டப்பட்டுத் தானே பகுதி நேரம் சம்பாதித்து, காஸா பல்கலைக் கழகத்தில் அரபி இலக்கியம் படித்து, பட்டம் வாங்கிக்கொண்டு போராளியானாரே, அங்குதான் அவர் வித்தியாசப்படுகிறார். 'இலக்கியம் எனக்கு; போராட்டம் எங்களுக்கு' என்பார் ஹனியா.

படிக்கிற காலத்திலேயே அவருக்கு அரசியல் ஈடுபாடு உண்டு. கொஞ்சம் சமயம் கிடைத்தால், யாசின் வீட்டுக்குப் போய்விடுவார். உட்கார்ந்து அவர் பேசுவதைக் கேட்டுவிட்டுத் திரும்புவது அவருக்குப் பல்கலைக்கழகப் படிப்பைவிட முக்கியம். அங்கேதான் அவருக்கு ரண்டிஸி அறிமுகமானார். மஹ்மூத் அறிமுகமானார். மற்ற அத்தனை ஹமாஸ் தலைவர்களும் அறிமுகமானார்கள்.

ஒரு பக்கம் படிப்பு. இன்னொரு பக்கம் போராட்டம் என்பதை மிகத் திறமையாக அவர் கையாண்ட விதம், யாசினுக்குப் பிடித்தது. ஹனியாவிடம் முதலில் அவர் அறிக்கைகள் தயார் செய்யும் வேலையைத்தான் கொடுத்தார். விவாதங்களின் இடையே சட்டென்று, 'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என்று கருத்துக் கேட்பார்.

வயதில் மிகவும் இளையவர் என்றாலும், ஹனியா பெரும்பாலும் யாசினைப் போலவே சிந்திக்கக்கூடியவர். ஆகவே, அவரது குரல் ஹமாஸ் இயக்கத்தினருக்கும் சரி, காஸா பகுதி மக்களுக்கும் சரி யாசினே பேசுவது போலத்தான் கேட்கும்.

1989-ம் ஆண்டு மற்ற பல ஹமாஸ் தலைவர்களைப் போலவே, ஹனியாவும் இஸ்ரேலிய அரசால் நாடு கடத்தப்பட்டு லெபனானுக்குப் போனார். திரும்பி வந்ததும் அவரை, அவர் படித்த பல்கலைக்கழகமே டீனாகப் பதவி கொடுத்துக் கூப்பிட்டது.

கசக்கிறதா? சரியென்று உடனே ஒப்புக்கொண்டு, பேராசிரியர் பணியையும் பார்த்துக்கொண்டு, ஹமாஸுக்காகவும் உழைக்கத் தொடங்கினார்.

அந்தக் காலகட்டத்தில் இஸ்ரேலுக்கு மிக அதிகம் குடைச்சல் கொடுத்த ஹமாஸ் தலைவர் என்றால், ஹனியாதான். ஹமாஸின் அரசியல் குழுவிலும் அவர் உறுப்பினராக இருந்தார்; ஆயுதக் குழுவிலும் மெம்பராக இருந்தார். அனல் பறக்க அறிக்கையும் வீசுவார், தீ பறக்க ராக்கெட்டும் விடுவார். ஹமாஸின் பல தற்கொலைத் தாக்குதல் திட்டங்களுக்கு வடிவம் கொடுத்தவர்

ஹனியாதான்.

இதனால் எப்படியாவது அவரைத் தீர்த்துவிடுவது என்று முடிவு செய்தது இஸ்ரேல் ராணுவம். ஒரு சமயம், ஹனியா ஜெருசலேத்துக்கு வருகிறார் என்கிற தகவல் கேள்விப்பட்டு, தயாராக ஒரு ஹெலிகாப்டரை அங்கே நிறுத்தியிருந்தார்கள். எங்கிருந்தோ, எங்கோ பறந்து போகிற ஹெலிகாப்டர் என்பது போல் ஒரு செட்டப். ஹனியா இறங்கும் சமயம் பார்த்து, கரெக்டாக மேலிருந்து குண்டு வீசிவிட்டுக் காணாமல் போய்விட வேண்டும் என்பது திட்டம்.

ஜெருசலேத்தில் உள்ள அல் அக்ஸா பள்ளிவாசலை மீட்பதற்காக, ஹமாஸ் மேற்கொண்டிருந்த மிக நெடிய போராட்டத்தின் தொடக்க காலம் அது. இன்னொரு பக்கம், பாலஸ்தீன் விடுதலை இயக்கமும் அதே போராட்டத்தில் இறங்கியிருந்தது. எனவே, போராளிக் குழுத் தலைவர்கள் அடிக்கடி ஜெருசலேத்துக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

யார் தப்பித்தாலும் சரி, ஹனியாவைத் தீர்த்துவிடுவது என்று முடிவு செய்த இஸ்ரேலியப் படை, மேற்படி திட்டத்தைச் செயல்படுத்தியபோது, மிக மிக அதிர்ஷ்டவசமாகத்தான் ஹனியா உயிர் பிழைத்தார்.

குண்டு வீச்சில் அவரது ஒரு கை மட்டுமே பாதிக்கப்பட்டது. மயிரிழையில் தப்பித்துவிட்டார்.

அந்தச் சமயத்தில்தான், ஹனியாவை யாசின் ஹமாஸின் மத்தியக் குழு உறுப்பினராக்கி, தலைமை அலுவலகத்துக்கு தினசரி வந்துபோகும்படி பணித்திருந்தார். அவரது இருப்பும் சேவையும் இயக்கத்துக்கு மிக முக்கியமானது என்பதாக அறியப்பட்டிருந்தது. எனவே, குண்டு வீச்சு சம்பவத்துக்குப் பிறகு, ஹனியாவை கோழிக்குஞ்சு போல அடைகாக்க ஆரம்பித்துவிட்டார்கள். வெளியே தலையே காட்டமாட்டார். ஆனால், செயல்பாடுகள் எப்போதும்போல் தொடரவே செய்தது.

டிசம்பர் 2005-ல் ஹனியா, ஹமாஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது தலைமையில்தான் ஹமாஸ் ஜனவரி 2006 தேர்தலைச் சந்தித்து பெருவெற்றி பெற்றது. (இந்த விவரங்கள் பின்னால் வரும்.)

அந்த மகத்தான தேர்தல் வெற்றி பிப்ரவரியில் ஹனியாவை பாலஸ்தீன் அத்தாரிடியின் பிரதமராக்கியது. ஆளும் கட்சியாக ஹமாஸ். அதிபராக, பி.எல்.ஓவின் மஹ்மூத் அப்பாஸ். ஏழாம் பொருத்தம் என்பார்களே, அது.

தினசரி முட்டல் மோதல், வாக்குவாதங்கள் இன்றுவரை தொடரத்தான் செய்கிறது. ஹனியா அடிக்கடி தலைமறைவாக வேண்டிய அவசியமும் இருக்கவே இருக்கிறது. கொள்கை அளவில் இஸ்ரேலை ஹமாஸ் அங்கீகரித்துவிட்டதாக அறிவித்தாலும், இன்றைக்கும் ஹனியா மட்டும் முகத்தைத் திருப்பித்தான் வைத்துக்கொண்டிருக்கிறார். கொலை மிரட்டல்களுக்கு அவரது ஒரே பதில் - 'முடிந்தால் கொன்றுகொள்ளுங்களேன்?'

ஆக, ஹமாஸ்காரர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று ஒரு ஐடியா கிடைத்திருக்கும் அல்லவா? இனி, ஆட்டத்துக்குப் போகலாம்.